17-04-2022 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 25.03.1990

அனத்து அனுபவங்களின் பிராப்தியின் ஆதாரம் - தூய்மை

இன்று சிநேக கடலான பாப்தாதா தனது நாலாபுறங்களிலும் இருக்கும் ஆன்மீக குழந்தைகளின் ஆன்மீக தோற்றங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு பிராமண குழந்தையின் தோற்றத்தில் ஆன்மீகம் இருக்கிறது. ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறது. ஏனெனில் ஆன்மீகத்தின் ஆதாரம் தூய்மையாகும். எண்ணம், சொல் மற்றும் செயலில் எந்த அளவிற்கு தூய்மையின் தாரணை இருக்குமோ, அதற்கேற்பவே ஆன்மீகத்தின் பிரகாசம் தோற்றத்தில் தென்படுகிறது. பிராமண வாழ்க்கையின் பிரகாசமே தூய்மையாகும். நிரந்தரமான அதீந்திரிய சுகம் மற்றும் (ஸ்வீட் சைலன்ஸ்) இனிமையான அமைதியின் விசேஷமான ஆதாரம் தூய்மை யாகும். தூய்மை வரிசைக் கிரமமாக இருக்கிறது என்றால், இந்த அனுபவங்களின் பிராப்தி கூட வரிசைக்கிரமமாக இருக்கும். தூய்மை முதல் நம்பரில் இருந்தது என்றால், தந்தை மூலமாக அனுபவங்களின் பிராப்தி கூட முதல் நம்பராக இருக்கும். தூய்மையின் பிரகாசம் இயல்பாகவே நிரந்தரமாக முகத்தில் தென்படுகிறது. தூய்மையின் ஆன்மீகம் நிறைந்த கண்கள் எப்பொழுதுமே நிர்மலமாக தென்படக் கூடியதாக இருக்கும். எப்பொழுதுமே கண்களில் ஆன்மீக ஆத்மா மற்றும் ஆன்மீக தந்தையின் பிரகாசம் (ஒளி) அனுபவமாகும். இன்று பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் விசேஷமாக இந்த (சமக்) பிரகாசம் மற்றும் (ஜலக்) ஒளியை பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் கூட தங்களது ஆன்மீக தூய்மையின் தோற்றங்களை ஞானம் என்ற கண்ணாடியில் பார்க்க முடியும். ஏனெனில் விசேஷ ஆதாரம் தூய்மையாகும். தூய்மை என்பது பிரம்மசரியத்திற்காக மட்டும் கூறப்படுவதில்லை. ஆனால் எப்பொழுதும் பிரம்மசாரி மற்றும் எப்பொழுதும் பிரம்மாசாரி அதாவது பிரம்மா தந்தையின் நடத்தைப்படி ஒவ்வொரு அடியிலும் நடப்பவர்கள். அவர்களது ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் செயல் என்ற அடிகள் (நேச்சுரல்) இயல்பாகவே பிரம்மா தந்தையின் அடி மீது அடியாக இருக்கும். அதற்கு நீங்கள் ஃபுட் ஸ்டெப் என்று கூறுகிறீர்கள். அவர்களது ஒவ்வொரு அடியிலும் பிரம்மா தந்தையின் நடத்தை தென்படும். எனவே பிரம்மாசாரி ஆவது கடினம் அல்ல. ஆனால் இந்த மனம், சொல், செயலின் ஒவ்வொரு அடியிலும் பிரம்மாசாரியாக இருப்பது - இதன் மீது (செக்) சோதனை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. மேலும் யார் பிரம்மாசாரியாக இருப்பார் களோ, அவர்களது முகம் மற்றும் நடத்தை எப்பொழுதுமே உள்முகமானவர்களாக, மேலும் அதீந்திரிய சுகம் உடையவர்களாக இருப்பதாக அனபவமாகும். ஒன்று (சையன்ஸ்) அறிவியலின் சாதனம், மேலும் பிராமண வாழ்க்கையில் இருப்பது ஞானத்தின் சாதனம். எனவே பிரம்மாசாரி ஆத்மா அறிவியலின் சாதனங்கள் அல்லது ஞானத்தின் சாதனங்களின் ஆதாரத்தில் எப்பொழுதும் சுகமுடையவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால் சாதனங்களைக் கூட தங்களது சாதனையின் சொரூபத்தில் காரியத்தில் கொண்டு வருவார்கள். சாதனங்களை ஆதாரமாக அமைக்க மாட்டார்கள். ஆனால் தங்களது சாதனையின் ஆதாரத்தால் சாதனங் களை காரியத்தில் எடுத்து வருவார்கள் - எப்படி ஒரு சில பிராமண ஆத்மாக்கள்

சில நேரங் களில் இவ்வாறு கூறுவார்கள் - எங்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த துணை கிடைக்கவில்லை, எனவே மகிழ்ச்சி குறைந்து விட்டது அல்லது சேவையின், சுயத்தின் ஊக்கம் உற்சாகம் குறைந்து போய் விட்டது. முதன் முதலிலோ மிகவுமே அதீந்திரிய சுகம் இருந்தது. ஊக்கம் உற்சாகம் கூட இருந்தது - நான் மற்றும் பாபா - வேறு எதுவுமே தென்படவில்லை. ஆனால் (மெஜாரிட்டி) பெரும்பான்மையோர் 5 வருடங்களிலிருந்து 10 வருடங்களுக்குள் தங்களுக்குள் சில நேரங்களில் ஒரு மாதிரி, சில நேரங்களில் வேறொரு மாதிரி - இப்படி அனுபவம் செய்ய முற்படுகிறார்கள். இதன் காரணம் என்ன? முதல் வருடத்திலிருந்து 10 வருடங்கள் வரை ஊக்கம் உற்சாகம் பத்து மடங்கு அதிகரிக்கத் தான் வேண்டும் அல்லவா? ஆனால் ஏன் குறைந்து போய் விட்டடது? அதற்கான காரணம் இது தான் - சாதனையின் ஸ்திதியில் இருந்து சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்துவது இல்லை. ஏதாவது ஒன்றல்லது ஒன்று - ஆதாரத்தை தனது முன்னேற்றத்தின் ஆதாரமாக ஆக்கிக் கொண்டு விடுகிறார்கள். மேலும் அந்த ஆதாரம் ஆடிப் போய்விடும் பொழுது ஊக்கம் உற்சாகம் கூட ஆடிப் போய் விடுகிறது. அப்படியும் ஆதாரத்தை ஏற்றுக் கொள்வது ஒன்றும் தீய விஷயம் கிடையாது. ஆனால் ஆதாரத்தையே (ஃபவுண்டேஷன்) அஸ்திவாரமாக ஆக்கிக் கொண்டு விடுகிறார்கள். தந்தை நடுவிலிருந்து வெளியேறி விடுகிறார் மற்றும் ஆதாரத்தை அஸ்திவாரமாக ஆக்கிக் கொண்டு விடுகிறார்கள். எனவே என்ன குழப்பம் ஏற்படுகிறது? இப்படி ஆகி இருந்திருந்தால், இப்படி ஆகி இருக்காது. இது ஆகி இருந்தால், இவ்வாறு ஆகி இருக்கும். இதுவோ மிகவும் அவசியமானது - இவ்வாறு அனுபவம் ஏற்பட ஆரம்பிக்கிறது. சாதனை மற்றம் சாதனத்தின் (பேலன்ஸ்) சமநிலை இருப்பதில்லை. சாதனங்களின் பக்கம் புத்தி அதிகமாக செல்கிறது. சாதனையின் பக்கம் புத்தி குறைந்து விடுகிறது. எனவே எந்தவொரு காரியத்திலும் சேவை யிலும் தந்தையின் (பிளெஸ்ஸிங்) ஆசிகளை அனுபவம் செய்வதில்லை. மேலும் (பிளெஸ்ஸிங்) அசிகளின் அனுபவம் ஏற்படாத காரணத்தினால் சாதனங்கள் மூலமாக வெற்றி கிடைத்து விட்டால் ஊக்கம் உற்சாகம் மிகவும் நன்றாக இருக்கும். மேலும் வெற்றி குறைந்து விட்டால் ஊக்கம் உற்சாகம் கூட குறைந்து போய் விடுகிறது. சாதனை என்றால் சக்திசாலி நினைவு. நிரந்தரமாக தந்தையுடன் கூட இதயபூர்வமாக சம்பந்தம். யோகத்தில் அமர்ந்து விடுதல் - இதற்கு மட்டும் சாதனை என்று கூற மாட்டார்கள். ஆனால் எப்படி உடலால் அமருகிறீர்களோ, அதே போல இதயபூர்வமாக மனம், புத்தி ஒரு தந்தையின் பக்கம், தந்தையுடன் கூடவே அமர்ந்து விட வேண்டம். உடல் இங்கு அமர்ந்து தான் இருக்கிறது. ஆனால் மனம் ஒரு பக்கம், புத்தி இன்னொரு பக்கம் போய் கொண்டிருக்கிறது. இதயத்தில் வேறு ஏதோ வந்து கொண்டிருக்கிறது என்றால் இதற்கு சாதனை என்ற கூற மாட்டார்கள். மனம், புத்தி, இதயம் மற்றும் உடல் - நான்குமே சேர்ந்தாற் போல தந்தையுடன் கூட சமானமான ஸ்திதியில் இருப்பது - இது தான் சரியான சாதனை புரிந்ததா? (யதார்த்த) சரியான சாதனை (சாதனா) இல்லையென்றால், பிறகு (ஆராதனா) ஆராதனை நடக்கிறது. இதற்கு முன்பும் கூறியுள்ளார், சில நேரங்களில் (யாத்) நினைவு செய்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் (ஃபரியாத்) முறை யிடுகிறார்கள். நினைவில் முறையிடுதலின் அவசியம் கிடையாது. சாதனை செய்பவர்களின் ஆதாரம் எப்பொழுதும் தந்தையாகத் தான் இருப்பார். மேலும் எங்கு தந்தை இருக்கிறாரோ, அங்கு எப்பொழுதும் குழந்தைகளின் பறக்கும் கலை இருக்கும். குறைந்து போய்

விடாது. ஆனால் அநேக மடங்கு அதிகரித்துக் கொண்டே போகும். சில நேரங்களில் மேலே, சில நேரங்களில் கீழே - இப்படி இருந்தால் களைப்பு ஏற்படுகிறது. நீங்கள் எந்தவொரு குழப்பமான இடத்தில் கூட அமர்ந்திருந்தீர்கள் என்றால் என்ன ஆகும். இரயில் வண்டியில் மிகவும் ஆடும் பொழுது களைப்பு ஏற்படுகிறது அல்லவா? சில நேரங்களில் மிகவும் ஊக்கம் உற்சாகத்தில் பறக் கிறீர்கள், சில நேரங்களில் நடுவில் இருக்கிறீர்கள், சில நேரங்களில் கீழே வந்து விடுகிறீர்கள். எனவே குழப்பம் ஏற்பட்டு விடுகிறது அல்லவா? எனவே ஒன்று களைப்படைந்து விடுகிறீர்கள் அல்லது போர் (சலிப்பு) அடித்து போய் விடுகிறீர்கள். பிறகு என்ன, இப்படியே தான் நடக்க வேண்டுமா என்று யோசிக்கிறீர்கள். ஆனால் யார் சாதனை மூலமாக தந்தையுடன் கூட இருக்கிறார்களோ, அவர்களை பொறுத்தவரை சங்கமயுகத்தில் எல்லாமே புதியதிலும் புதியதாக அனுபவம் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஒவ்வொரு கணத்திலும், ஒவ்வொரு எண்ணத்திலும் புதுமை. ஏனெனில் ஒவ்வொரு அடியிலும் பறக்கும் கலை, அதாவது பிராப்தி மேல் பிராப்தி ஆகிக் கொண்டே இருக்கும். ஒவ்வொரு நேரமும் பிராப்தி ஆகும். சங்கமயுகத்தில் ஒவ்வொரு நேரமும் தந்தை, ஆஸ்தி மற்றும் வரதானத்தின் ரூபத்தில் பிராப்தி செய்விக்கிறார். எனவே பிராப்தியில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. மேலும் மகிழ்ச்சியில் ஊக்கம் உற்சாகம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். குறைந்து போகவே முடியாது. மாயை வந்தாலும் கூட வெற்றியாளர் ஆகி விடுவதற்கான மகிழ்ச்சி இருக்கும். ஏனெனில் மாயை மீது வெற்றி அடைவதற்கான (நாலேஜ்ஃபுல்) ஞானம் நிறைந்தவராக ஆகி விட்டுள்ளீர்கள். எனவே 10 வருடங்களாக இருப்பவர்களுக்கு 10 மடங்கு, 20 வருடங் களாக இருப்பவர்களுக்கு 20 மடங்கு ஆகி கொண்டிருக்கிறதா? சொல்லும் பொழுது இப்படி சொல்லப்படுகிறது. ஆனால் கிடைப்பதோ அநேக மடங்கு ஆகும்.

இப்பொழுது இந்த வருடத்தில் என்ன செய்வீர்கள்? ஊக்கம் உற்சாகமோ தந்தை மூலமாக கிடைத்திருக்கும். உங்களுடைய சொந்த சொத்து ஆகும். தந்தையின் ஆஸ்தியை தன்னுடைய தாக ஆக்கிக் கொண்டு விட்டுள்ளீர்கள். எனவே ஆஸ்தி அதிகரிக்கப்படுகிறதா, இல்லை குறைக்கப்படுகிறதா? இந்த வருடம் 4 விதமான சேவை மீது கவனத்தை (அட்டென்ஷன்) அண்டர்லைன் செய்யுங்கள்.

முதல் நம்பர் ஆவது - சுயத்தின் சேவை. இரண்டாவது உலக சேவை. மூன்றாவது - மனதின் மூலமாக சேவை. ஒன்று பேச்சின் மூலமாக, வார்த்தைகள் மூலமாக சேவை இரண்டாவது மனசா சேவை கூட விசேஷமானது. நான்காவது - யக்ஞ சேவை.

எங்கு இருந்தாலும் சரி, எந்தவொரு சேவா கேந்திரத்தில் இருந்தாலும் சரி, அந்த அனைத்து சேவா கேந்திரங்களுமே யக்ஞ குண்டம் ஆகும். அப்படியின்றி மதுபன் மட்டும் யக்ஞம் ஆகும். மேலும் உங்களுடைய இடங்கள் யக்ஞம் இல்லை என்பதல்ல. எனவே யக்ஞ சேவை, அதாவது கர்மணா மூலமாக ஏதாவது கொஞ்சம் சேவை அவசியம் செய்ய வேண்டும். பாப்தாதாவிடம் சேவையின் மூன்ற விதமான கணக்குகள் அனைவரினுடையதும் சேமிப்பு ஆகிறது. மனம், சொல் மற்றும் செயல், உடல், மனம் மற்றும் பொருள். ஒரு சில பிராமணர்கள் தங்களாலோ பொருளால் சகயோகி ஆக முடிவதில்லை. சேவை செய்ய முடிவதில்லை. ஏனெனில் நாங்களோ சமர்ப்பணம் ஆகி உள்ளோம் என்ற

நினைக்கிறார்கள். பணம் சம்பாதிப்பதே இல்லை. எனவே பணத்தால் எப்படி சேவை செய்வீர்கள்? ஆனால் சமர்ப்பணமான ஆத்மா யக்ஞத்தின் காரியத்தில் தங்களது கவனம் கொடுத்து சிக்கனம் செய்கிறார்கள் என்றால் எப்படி பணத்தில் சிக்கனம் செய்தார்களோ, அந்த சிக்கனம் செய்து பணம் அவரது பெயரில் சேமிப்பு ஆகிறது. இது சூட்சும கணக்கு ஆகும். யாராவது நஷ்டம் ஏற்படுத்துகிறார்கள் என்றால் கணக்கில் சுமை சேமிப்பு ஆகிறது. மேலும் சிக்கனம் செய்கிறார்கள் என்றால் அது பணத்தின் கணக்கில் சேமிப்பு ஆகிறது. யக்ஞத்தினுடைய ஒவ்வொரு தானியம் கூட பொற்காசுக்கு சமம் ஆகும். யக்ஞத்திற்கு மனதார (வெளிப் பகட்டுக்காக அல்ல) சிக்கனம் செய்கிறார்கள் என்றால் அதற்கான பொற்காசுகள் சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கும். இரண்டாவது விஷயம் - சமர்ப்பணமான ஆத்மா சேவை மூலமாக மற்றவர்களுடைய பணத்தை பயனுடையதாக செய்விக்கிறார்களோ, அதிலிருந்து அவருக்கு கூட அவரது பங்கு சேமிப்பு ஆகிறது. எனவே அனைவருக்குமே 3 விதமான கணக்கு இருக்கிறது. மூன்ற கணக்குகளினுடைய சதவிகிதம் கூட நன்றாக இருக்க வேண்டும். ஒரு சிலரோ இவ்வாறு நினைக்கிறார்கள் - நாங்களோ பேச்சினுடைய சேவையில் மிகவும் பிஸியாக இருக்கிறோம். எங்களுடைய கடமையே பேச்சின் மூலமாக சேவை செய்வதற்கானதாக இருக்கிறது. மனசா மற்றும் கர்மணாவில் சதவிகிதம் குறைவாக இருக்கிறது. ஆனால் இது கூட சாக்குப் போக்கு நடக்காது. சொல்லின் மூலமாக சேவை செய்யும் நேரத்தில் மனசா மற்றும் பேச்சு - சேர்ந்து சேவை செய்தீர்கள் என்றால் என்ன விளைவு இருக்கும்? மனம் மற்றும் சொல் மூலமாக சேர்ந்தாற் போல சேவை செய்ய முடியுமா? ஆனால் சொல் மூலமாக சேவை செய்வது சுலபமானது. மனசாவில் கவனம் கொடுக்க வேண்டிய விஷயம் இருக்கிறது. எனவே பேச்சினுடையது சேமிப்பு ஆகி விடுகிறது. ஆனால் மனசாவின் கணக்கு காலியாக இருந்து விடுகிறது. மேலும் பேச்சிலோ நீங்கள் அனைவரும் தந்தையை விடவும் புத்திசாலியாக இருக்கிறீர்கள். பாருங்கள் தற்சமயம் பெரிய தாதிகளை விடவும் சிறிய சிறியவர்கள் நன்றாக சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள். ஏனெனில் புது இரத்தம் ஆகும் அல்லவா? இவ்வாறு தாரளமாக முன்னால் செல்லுங்கள். பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். ஆனால் மனசாவின் கணக்கு காலியாக இருந்து விடும். ஏனெனில் ஒவ்வொரு கணக்கிற்கும் 100 மார்க்குகள் இருக்கிறது. ஸ்தூல சேவைக்கு மட்டும் கர்மணா சேவை என்ற கூறுவதில்லை. கர்மணா என்றால் கூட்டமைப்பில், தொடர்பில், சம்பந்தத்தில் வருவது. இது கர்மத்தின் கணக்கில் சேமிப்பு ஆகி விடுகிறது. எனவே நிறைய பேர்களினுடைய மூன்று கணக்குகளிலுமே நிறைய வித்தியாசம் உள்ளது. மேலும் அவர்கள் நாங்கள் நிறைய சேவை செய்து கொண்டிருக்கிறோம், மிகவும் நன்றாக இருக்கிறோம் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். தாராளமாக குஷிபடுங்கள். ஆனால் கணக்கு காலியாக கூட இருக்கக் கூடாது. ஏனெனில் பாப்தாதாவோ குழந்தைகள் மீது சிநேகம் உடையவராக இருக்கிறார் அல்லவா? பிறகு இப்படி கூட நடக்கிறது என்று எங்களுக்கு ஒரு சிறிய சமிக்ஞை கூட கொடுக்கவில்லையே என்று அப்பேர்ப்பட்ட புகார் கொடுக்காதீர்கள். அந்த நேரத்தில் பாப்தாதா இந்த பாயிண்ட்டை நினைவூட்டுவார்.

டி.வி.யில் கூட படம் முன்னால் வந்து விடும். எனவே இந்த வருடம் சேவை தாராளமாக நிறைய செய்யுங்கள். ஆனால் இந்த மூன்று விதமான கணக்கு

மேலும் நான்கு விதமான சேவைகள் சேர்ந்தாற்போல செய்யுங்கள். சொல் மூலமாக சேவை என்ற தட்டு பாரமாக ஆகி விட்டு மனசா மற்றும் கர்மணா லேசாக ஆகி விட்டது என்றால் என்ன ஆகும்? பேலன்ஸ் இருக்காது அல்லவா? பேலன்ஸ் இல்லாத காரணத்தால் ஊக்கம் உற்சாகம் கூட மேலே கீழே ஆகிறது. ஒன்று அட்டென்ஷன் கவனம் வைப்பது, ஆனால் அட்டென்ஷன் என்பதை டென்ஷன் ஆக மாற்றாதீர்கள் என்று பாப்தாதா திரும்ப திரும்ப கூறுகிறார். நிறைய முறை அட்டென்ஷன் என்பதை டென்ஷன் ஆக ஆக்கி விடுகிறார்கள் - இப்படி செய்யாதீர்கள். சகஜமாக மற்றும் (நேச்சுரல்) இயல்பானதாக அட்டென்ஷன் இருக்கட்டும். டபிள் லைட் ஸ்திதியில் (லேசாகவும் ஒளியாகவும் இருக்கக் கூடிய நிலையில்) இயல்பான கவனம் (நேச்சுரல் அட்டென்ஷன்) இருக்கவே இருக்கும். நல்லது.

எப்பொழுதும் தனது முகம் மற்றும் நடத்தையில் தூய்மையின் ஆன்மீகத்தினுடைய பிரகாசம் கொண்டிருக்கக் கூடிய சதா ஒவ்வொரு அடியிலும் பிரம்மாசாரியாக இருக்கும் சிறந்த ஆத்மாக் கள், சதா தங்களது சேவையின் அனைத்து கணக்குகளையும் நிரம்பியதாக வைத்திருக்கும், சதா மனதார தங்களது முன்னேற்றத்திற்கான திட சங்கல்பம் செய்யக் கூடிய எப்பொழுதும் சுய முன்னேற்றத்தின் பொருட்டு சுயம் தங்களை முதல் நம்பர் ஆத்மா என்ற கருவியாக ஆக்கிக் கொண்டு விடும் - அப்பேர்ப்பட்ட தந்தைக்கு பிரியமான மேலும் விசேஷமாக பிரம்மா தாயிற்கு பிரியமான - இன்றைக்கு (மதர்ஸ் டே) தாய்மார்களின் நாள் கொண்டாடினீர்கள் அல்லவா? எனவே பிரம்மா தாயின் ராஜா போன்ற செல்லமான குழந்தைகளுக்கு பிரம்மா தாயின் மற்றும் விசேஷமாக தந்தையினுடையதும் இதயபூர்வமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

மதுபன் நிவாசிகளிடம் - மதுபன் நிவாசிகளுக்கு மிகவும் நல்ல மற்றும் பொன்னான வாய்ப்பு கிடைக்கிறது. எனவே நாடகப்படி யாருக்கு திரும்ப திரும்ப கோல்டன் சான்ஸ் கிடைக்கிறதோ, அவர்களை பாப்தாதா பெரியதிலும் பெரிய பிரமுகர்கள் என்று கூறுகிறார். சேவையின் பலன் மற்றும் பலம் இரண்டுமே கிடைக்கிறது. பலமும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த பலம் - சேவை செய்துக் கொண்டிருக்கிறது மேலும் பலன் (பழம்) சதா சக்திசாலியாக ஆக்கி முன்னேற்றிக் கொண்டிருக்கிறது. எல்லாரையும் விட அதிகமாக முரளிகள் யார் கேட்கிறார்கள்? மதுபனில் இருப்பவர்கள். மற்றவர்களோ எண்ணிக்கையில் - கணக்கிட்டு பார்க்கும் அளவிற்கு மட்டுமே முரளிகள் கேட்கிறார்கள். மேலும் நீங்கள் எப்பொழுதுமே முரளிகள் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். கேட்பதில் கூட முதல் நம்பரில் இருக்கிறீர்கள். மேலும் செய்வதில்? செய்வதில் கூட முதல் நம்பராக இருக்கிறீர்களா? இல்லை சில நேரங்களில் இரண்டாம் நம்பர் ஆகி விடுகிறதா? யார் சமீபத்தில் இருக்கிறார்களோ, அவர்கள் மீது விசேஷ உரிமை இருக்கும். எனவே பாப்தாதாவிற்கு கூட விசேஷ உரிமை இருக்கிறது. செய்யவே வேண்டும். மேலும் முதல் நம்பரில் செய்ய வேண்டும் என்று உரிமையுடன் கூறுகிறார். எதில் கூட பின்னால் நம்பர் இருக்கக் கூடாது. எல்லா சேமிப்பு கணக்கும் முதல் நம்பரில் நிறைந்ததாக இருக்க வேண்டும். ஒரேயொரு கணக்கு கூட சிறிதளவும் காலியாக இருக்கக் கூடாது. எப்படி மதுபனில் சர்வ பிராப்திகள் - ஆத்மாவிற்காகட்டும், சரீரத்திற்காகட்டும் எல்லாமே நம்பர் ஒன் கிடைக்கிறது. அதே போல, இப்பொழுது செய்வதில் சதா நம்பர் ஒன். ஒன்

என்பதன் அடையாளம் ஒவ்வொரு விஷயத்திலும் வின் செய்வது. வின் வெற்றியாளர் என்றால் அவசியம் ஒன் முதல் நம்பராகத் தான் இருப்பார். வின் வெற்றி அவ்வப்பொழுது என்றால் நம்பர் ஒன் கிடையாது. நல்லது. சேவையின் வாழ்த்துக்கள். சேவையின் சர்ட்டி்ஃபிகேட் - சான்றிதழ்களோ நிறைய கிடைத்துள்ளது. மேலும் எந்த சான்றிதழ்கள் பெற வேண்டும்? ஒன்று தங்களது (புருஷார்த்தம்) முயற்சியில் மனதிற்கு பிரியமானவராக இருக்க வேண்டும். இரண்டாவது பிரபு (பகவானிற்கு) பிரியராக இருக்க வேண்டும். மேலும் மூன்றாவது குடும்பத்திற்கு (பரிவாரம்) பிரியமானவராக இருக்க வேண்டும். இந்த மூன்று சர்ட்டி்ஃபிகேட் ஒவ்வொருவரும் பெற வேண்டும். அப்படியின்றி தனது மனதிற்கு பிரியமானவர் என்ற சர்ட்டி்ஃபிகேட் இருக்கிறது. ஆனால் இரண்டாவது இல்லை என்றிருக்க கூடாது. மூன்றுமே வேண்டும். எனவே யார் தந்தைக்கு பிரியமானவர்கள்? தந்தை என்ன கூறினாரோ, அதை செய்தார்கள் - இது பிரபுவிற்கு பிரியர் என்ற சர்ட்டி்ஃபிகேட். மேலும் தனக்கு பிடித்தமானவர் என்றால் உங்களது மனம் எப்படியோ, அதுவே தந்தையின் மனம் ஆக இருக்க வேண்டும். தனது எல்லைக்குட்பட்ட மனதிற்கு பிடித்தமானவர் அல்ல. ஆனால் தந்தையின் மனம் எதுவோ, அதுவே எனது மனம். எது தந்தையின் மனமோ அதுவே எனது மனம். எது தந்தையின் மனதிற்கு பிடித்தமானதோ, அதுவே எனது மனத்திற்கு பிடித்தமானது - இதற்கு தான் மனதிற்கு பிடித்தமான என்ற சர்ட்டி்ஃபிகேட். மேலும் பரிவாரத்தின் சந்தோஷம் என்ற சர்ட்டி்ஃபிகேட் என்று கூறுவார்கள். எனவே இந்த மூன்று சர்ட்டி்ஃபிகேட் கூட பெற்றிருக்கிறீர்களா? என்ன சர்ட்டி்ஃபிகேட் கிடைக்கிறதோ, அதை (வெரி்ஃபை) சரிபார்க்கக் கூட செய்கிறார்கள். பெரியவர்கள் மூலமாக சரி பார்க்கக் கூட வேண்டி இருக்கும். தந்தையோ சீக்கிரமாக திருப்தி அடைந்து விடுவார். ஆனால் இங்கு எல்லாரையும் திருப்திப்படுத்த வேண்டும். எனவே யார் கூட இருக்கிறார்களோ, அவர்கள் மூலமாக இந்த சர்ட்டி்ஃபிகேட்டை சரி பார்க்க வேண்டி வரும். தந்தையோ அதிகமாக கருணையுள்ளம் கொண்டவர் அல்லவா? எனவே ஹான் ஜீ - சரி என்று கூறி விடுவார். நல்லது, எல்லாருடைய (டிபார்ட்மெண்ட்) சேவை பிரிவுகள் (நிர்விக்கினமாக) தடையற்றதாக இருக்கிறதா? சுயம் நீங்களும் நிர்விக்கினமாக இருக்கிறீர்களா? சேவையின் நறுமணமோ உலகத்திலும் இருக்கிறது, பின் சூட்சுமவதனம் வரைக்கும் கூட இருக்கிறது. இப்பொழுது இந்த மூன்று சர்ட்டி்ஃபிகேட்டுகளை மட்டும் சரி பார்த்து கொள்ளுங்கள். நல்லது.

பாரதவாசிகளிடம் - சுகமளிக்கும் வள்ளலான தந்தையுடன் கூட இருந்து சுகமான குழந்தைகளாக ஆகி விட்டோம் என்ற அனுபவம் ஆகிறதா? தந்தை (சுக தாதா) சுகம் அளிக்கும் வள்ளல் ஆவார் என்றால், குழந்தைகள் சுக சொரூபமாக இருப்பார்கள் அல்லவா? எப்பொழுதா வது துக்கத்தின் அலைகள் வருகிறதா? சுகதாதாவின் குழந்தைகளிடம் துக்கம் வர முடியாது. ஏனெனில் சுகதாதா தந்தையின் கஜானா தனது கஜானாவாக ஆகி விட்டுள்ளது. சுகம் நமது ஆஸ்தியாக ஆகி விட்டது. சகம், சாந்தி, சக்தி மற்றும் குஷி - உங்களுடைய கஜானா ஆகும். தந்தையினுடைய கஜானாவே உங்களுடைய கஜானா ஆகி விட்டது. பாலகன் மற்றும் எஜமானர் ஆவீர்கள் அல்லவா? நல்லது. பாரதம் கூட குறைவானது அல்ல. ஒவ்வொரு குரூப்பிலும் வந்து சேர்ந்து விடுகிறார்கள். தந்தை கூட குஷி அடைகிறார். 5000 வருடங்களாக காணாமல் போய் விட்டவர்கள் மீண்டும் கிடைத்து விட்டால் எவ்வளவு குஷி ஏற்படும்? யாராவது ஒருவர் 10-12 வருடங்களாக காணாமல் போய் விட்டவர் கூட மீண்டும் கிடைத்து

விட்டால் எவ்வளவு குஷி ஏற்படுகிறது. மேலும் இங்கு 5 ஆயிரம் வருடங்களாக தந்தை மற்றும் குழந்தைகள் பிரிந்து போய் விட்டார்கள். மேலும் இப்பொழுது மீண்டும் கிடைத்து விட்டார்கள். எனவே மிகவும் குஷி இருக்கிறது அல்லவா? எல்லாரையும் விட அதிகமான குஷி யாரிடம் இருக்கிறது? எல்லாரிடமும் இருக்கிறது. ஏனெனில் இந்த குஷியின் கஜானா எவ்வளவு பெரியது என்றால் யார் எத்தனை எடுத்தாலும் சரி, எவ்வளவு எடுத்தாலும் சரி, எடுக்க எடுக்க குறையாதது ஆகும். எனவே ஒவ்வொருவரும் அதிகாரி ஆத்மா ஆவார்கள். அப்படித்தானே? சங்கமயுகத்திற்கு என்ன யுகம் என்று கூறுவார்கள்? சங்கமயுகம் குஷியின் யுகம் ஆகும். கஜானாக்களே கஜானாக்கள் உள்ளது. எவ்வளவு கஜானாக்கள் வேண்டுமோ, அவ்வளவு நிரப்ப முடியும். செல்வந்தர் ஆவீர்களாக. அனைத்து கஜானாக்களும் இருப்பதாக என்ற வரதானம் கிடைத்துள்ளது. அனைத்து கஜானாக்களின் வரதானம் பிராப்தி ஆகி உள்ளது. பிராமண வாழ்க்கையிலோ குஷிகளே குஷிகள் இருக்கிறது. இந்த குஷி ஒரு பொழுதும் மறைந்து ஒன்றும் போவதில்லையே. மாயை கஜானாக்களை திருடி விடுவது ஒன்றுமில்லையே. யார் எச்சரிக்கையுடன் உஷாராக இருக்கிறாரோ, அவரது கஜானாவை ஒரு பொழுதும் யாரும் கொள்ளையடிக்க முடியாது. யார் கொஞ்சம் கவனக்குறைவாக இருப்பரோ, அவரது கஜானாவை கொள்ளையடித்து விடுவார்கள். நீங்களோ எச்சரிக்கையுடன் இருக்கிறீர்கள் அல்லவா? இல்லை, அவ்வப்பொழுது தூங்கி விடுகிறீர்களா? யாராவது தூங்கி விட்டார்கள் என்றால் திருட்டு நடந்து விடுகிறது அல்லவா? கவனக்குறைவு ஆகி விட்டீர்கள். எப்பொழுதுமே உஷாராக எப்பொழுதுமே ஏற்றப்பட்ட ஜோதியாக இருந்தீகள் என்றால் கஜானாக்களை கொள்ளை அடித்து விட்டு செல்வதற்கு மாயைக்கு தைரியமே இருக்காது. நல்லது. எங்கிருந்து வந்திருந்தாலும் சரி எல்லாருமே கோடானு கோடி பாக்கியவான் ஆவீர்கள். எல்லாமே கிடைத்து விட்டது. 21 பிறவிகளுக்கு இந்த கஜானாக்கள் கூடவே இருக்கும் என்ற உத்தரவாதம் இருக்கிறது. இவ்வளவு பெரிய உத்தரவாதம் (கேரண்டி) யாருமே கொடுக்க முடியாது. எனவே இந்த கேரண்டி கார்டு வாங்கி இருக்கிறீர்கள் தானே. இந்த கேரண்டி கார்டு கொடுப்பவர் ஒன்றும் சாதாரண ஆத்மா கிடையாது. வள்ளல் ஆவார். எனவே எந்தவொரு பயமும் இல்லை. எந்தவொரு சந்தேகமும் இல்லை. நல்லது.

வரதானம் : (ஃபாலோ ஃபாதர்) தந்தையை பின்பற்றியபடியே நல்ல குழந்தை (சபூத்) ஆகி ஒவ்வொரு செயலிலும் (சபூத்) நிரூபணம் அளிக்கக் கூடிய வெற்றியின் சொரூபம் ஆவீர்களாக.

யார் (ஃபாலோ ஃபாதர்) தந்தையை பின்பற்றக் கூடிய குழந்தைகளாக இருக்கிறார்களோ, அவர்களே சமானமான வர்கள் ஆவார்கள். ஏனெனில் தந்தையின் அபு எதுவோ அதுவே உங்களது அபு. யார் ஒவ்வொரு செயலிலும் நிரூபணம் (சபூத்) அளிக்கிறார்களோ, அவர்களை தான் பாப்தாதா (சபூத்) நல்ல குழந்தை என்று கூறுவார். அதாவது சதா தந்தையின் ஸ்ரீமத் என்ற கை மற்றும் துணையை அனுபவம் செய்யக் கூடியவர்கள். எங்கு தந்தையின் ஸ்ரீமத் அல்லது வரதானத்தின் கை இருக்கிறதோ, அங்கு வெற்றி இருக்கவே இருக்கிறது. எனவே எந்தவொரு காரியம் செய்யும் பொழுதும் தந்தையின் வரதானத்தின் கை நம் மீது இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு வாருங்கள்.

சுலோகன்: வைரத்திற்கு சமமாக உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து செய்யக்

கூடிய செயல்கள் தான் மதிப்பிற்குரிய செயல்கள் ஆகும்.

அறிவிப்பு: இன்று மாதத்தின் மூன்றாவது ஞாயிறு ஆகும். அனைத்து இராஜயோகி தபஸ்பி சகோதர சகோதரிகள் மாலை 6.30 முதல் 7.30 வரை விசேஷ யோக அப்பியாசத்தின் பொழுது தங்களது இஷ்ட தேவனின் கருணையுள்ளத்தின் வள்ளல் சொரூபத்தின் நிலையில் நிலைத்திருந்து, பக்தர்களின் மனோவிருப்பங்களை பூர்த்தி செய்யக் கூடிய சேவை செய்யுங்கள்.